கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 29 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லெட்சுமணன் | வயது | 52 |
| தந்தை பெயர் | சின்னையன் | ஜாதி | |
| தொழில் | கம்பி பிட்டர் | மதம் | |
| ஊர் | பல்லவபுரம் | தாலுக்கா | |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பல்லவபுரத்தில் வசித்து கம்பி பிட்டர் வேலை செய்து வருகிறேன்.நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு எங்கள ஊரை சேர்ந்த ஒரு அம்மாவிற்கு விபத்து நடந்தது தொடர்பாக ஊர்காரர் என்ற முறையில் மருத்துவமனைக்கு பார்க்க சென்றிருந்தோம். அங்கு போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலிசார் விசாரணையில் கடந்த 13.07.2022 ஆம் தேதி காலை 11,00 மணிக்கு பிள்ளையார் கோவில் காலணி தெருவின் உள்ள பெட்டிக்கடைக்கு அசா1ன் அம்மா ஜாமான்கள் வாங்க வந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆஜர் எதிரி ஓட்டி வந்த டிராக்டர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமல் வந்து அசா1ன் அம்மா மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது தொடர்பாக தாலுக்கா போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்தவரின் உடலை மருத்துவமனையில் இருந்து பெறுவதற்காக சென்றிருந்தபோது போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 29 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | வயது | 42 |
| தந்தை பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | கம்பி பிட்டர் | மதம் | |
| ஊர் | பல்லவபுரம் | தாலுக்கா | |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பல்லவபுரத்தில் வசித்து கம்பி பிட்டர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த ஜானகி மற்றும் அசா1 என்னுடைய ஊர்காரர் ஆவார். ஆஜர் எதிரி எனது ஊர்காரர் ஆவார். விபத்து சம்மந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது. நான் வேலைக்கு சென்றிருந்தேன். விபத்து நடந்தது சம்மந்தமாக எனக்கு மறுநாள் தான் தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்..,

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலிசார் விசாரணையில் கடந்த 13.07.2022 ஆம் தேதி காலை 11,00 மணிக்கு பிள்ளையார் கோவில் காலணி தெருவின் உள்ள பெட்டிக்கடைக்கு அசா1ன் அம்மா ஜாமான்கள் வாங்க வந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆஜர் எதிரி ஓட்டி வந்த டிராக்டர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமல் வந்து அசா1ன் அம்மா மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அருகில் இருந்த நாங்கள் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் என்று கூறிவிட்டு தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 29 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 55 |
| தந்தை பெயர் | முருகேசன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | பல்லவபுரம் | தாலுக்கா | |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பல்லவபுரத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 என்னுடைய தெருக்காரர் ஆவார். ஆஜர் எதிரி எனது ஊர்காரர் ஆவார். விபத்து சம்மந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது. நான் வெளியூருக்கு வேலைக்கு சென்றிருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.,

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலிசார் விசாரணையில் கடந்த 13.07.2022 ஆம் தேதி காலை 11,00 மணிக்கு பிள்ளையார் கோவில் காலணி தெருவின் உள்ள பெட்டிக்கடைக்கு அசா1ன் அம்மா ஜாமான்கள் வாங்க வந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆஜர் எதிரி ஓட்டி வந்த டிராக்டர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமல் வந்து அசா1ன் அம்மா மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அருகில் இருந்த நாங்கள் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் என்று கூறிவிட்டு தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 29 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வசந்தி | வயது | 36 |
| கணவர் பெயர் | ராஜமாணிக்கம் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | தெப்பளாம்புலியூர் | தாலுக்கா | |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தெப்பளாம்புலியூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ஜானகி என்பவர் என்னுடைய அம்மா ஆவார். ஆஜர் எதிரி என்னுடைய ஊர்காரர் ஆவார். கடந்த 13.07.2022 ஆம் தேதி பகல் 11.00 மணியளவில் நானும் எனது அம்மாவும் பல்லாவபுரம் காலணி தெருவில் உள்ள பெட்டி கடைக்கு சென்று கொண்டிருந்தோம். எனக்கு முன்பாக என் அம்மா சென்று கொண்டிருந்தார். நாங்கள் சென்ற ரோட்டிற்கு பின்புறமாக வந்த டிராக்டர் வண்டி ஆரண் அடிக்காமல் வேகமாக வந்து எனது அம்மாவின் மீது மோதியது. எனது அம்மாவிற்கு இரண்டு கால்களும்., ஒரு கையும் விபத்தில் காயம் அடைந்தது. விபத்தை ஏற்படுத்திய டிராக்டரை ஆஜர் எதிரி ரகுபதி தான் ஓட்டி வந்தார். பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு எனது அம்மாவை கொண்டு சென்றோம். மருத்துவமனைக்கு வந்த பிறகு 12.00 மணியளிவில் எனது அம்மா இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது அம்மா ஜானகி பல்லவபுரம் பிள்ளையார் ரோட்டில் மேற்கு புறம் வீடு உள்ளது என்றால் சரிதான். நானும் எனது அம்மாவும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இறந்த எனது அம்மாவிற்கு எத்தனை வயது என்றால் 70 வயது இருக்கும்.

எனது அம்மாவிற்கு 70 வயதிற்கு மேலே இருக்கும் நான் வயதை குறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வயதோகி காரணமாக எனது அம்மாவிற்கு சரியாக பார்க்க இயலாது கேட்க இயலாது அவருக்கு அதன் காரணமாக தானாக விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் திருவாரூர் S உணவகத்தில் வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல. தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். இடையில் S உணவகத்தில் வேலை செய்தேன். ஜீலை மாதம் 2022 ஆம் ஆண்டு S உணவகத்தில் நான் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று என்னால் படித்து காட்ட முடியுமா என்றால் முடியாது. எனக்கு படிக்க தெரியாது. விபத்து நடந்ததாக யார் எனக்கு போன் மூலமாக தகவல் தெரிவித்தது என்றால் எனது மகள் யோகேஷ்வரி என்னிடம் தகவல் தெரிவித்தார். நான் அப்போது S உணவகத்தில் வேலையில் இருந்தேன் என்றால் சரிதான். நான் கூறுவது போல அந்த இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவிலலை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் நான் வந்த பின்னர் தான் எனது அம்மாவை 108 ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். எனது மகள் எனக்கு போன் மூலமாக தகவல் தெரிவித்தது எவ்வளவு நேரத்தில் நான் சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்தேன் என்றால் 20 நிமிடத்தில் வந்து சேர்ந்தேன். எனது தாயார் வயது முதிர்வின் காரணமாக வீட்டின் எதிரே உள்ள ரோட்டை கடக்கும்போது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதால் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இலலை என்றால் சரியல்ல.